**காலை வழிபாட்டுக் கூட்ட செயல்பாடுகள்**

**தமிழ் வருடம் விகாரி ஆண்டு, பங்குனி மாதம் 3ஆம் நாள்**

**2020ஆம் ஆண்டு மார்ச் 16ஆம் தேதி, திங்கள்கிழமை**

*குறள்:405*

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து

சொல்லாடச் சோர்வு படும்.

*குறள் விளக்கம்:*

கல்லாத ஒருவன் தன்னைத்தான் மதித்துக் கொள்ளும் மதிப்பு கற்றவன் அவனைக் கண்டு உரையாட, அப்பேச்சினால் கெடும்.

**பொன்மொழி**

**கற்றவரும், அறிஞர் பெருமக்களும், ஒருநாளும் பணத்தை வாழ்வின் இலட்சியமாக கொள்ள மாட்டார்கள்.**

**பழமொழி**

A little pot is soon hot

**சிறிய பானை சீக்கிரம் சூடாகும்**

**பொதுஅறிவு வினா விடை**

- **தமிழகத்தில் சட்ட மேலவை அமைக்கப்பட்ட ஆண்டு - 1935**
- **தமிழகத்தில் சட்ட மேலவை நீக்கப்பட்ட ஆண்டு - 1986**

**இரண்டொழுக்க உறுதிமொழி**

1. **ஒழுக்கமே என்னுடைய முதல் கற்றல் பணி என்பதை நான் அறிவேன். எனவே எந்நாளும் ஒழுக்கத்தைக் கடைபிடிப்பேன்.**
2. **யாருக்கும், எப்போதும் துன்பம் விளைவிக்க மாட்டேன். எல்லோரிடத்திலும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.**

*Abbreviations*

SAT - Scholastic Aptitude Test - பள்ளிக்கல்வி திறனறியும் தேர்வு

SB - Savings Bank - சேமிப்பு வங்கி

sowndeeswarischool.com

## இன்றைய செய்திகள்

- கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பது பற்றி தமிழக முதல் மந்திரி பழனிசாமி தலைமையில் இன்று ஆய்வுக்கூட்டம் நடைபெறுகிறது.
- சீனாவில் உருவான கொரோனா அதன் தாக்கம் குறைந்துள்ளதாகவும் புதிதாக யாரும் பாதிக்கப்படவில்லை என தகவல் வெளியாகி உள்ளது.
- ஈரானில் கொரோனா வைரஸ் பாதிப்புக்கு இதுவரை இல்லாத வகையில் இன்று ஒரே நாளில் 113 பேர் பலியாகி உள்ளனர்.
- தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று முதல் *31.03.2020* வரை எல்.கே.ஜி. முதல் 5ம் வகுப்பு வரை பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது.
- கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் நடவடிக்கையாக பாகிஸ்தான் எல்லை இன்று நள்ளிரவு முதல் மூடப்படும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

Bodinayakanur - 625 513
Learn more in our School